# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி
# அசல் வழக்கு எண். 396/2012

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. சம்பத்குமார் | மதம் | .. இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. சிதம்பரம் | தொழில் | .. கூலி |
| வயது | .. 61 | ஜாதி | .. செங்குந்தமுதலியார் |
| கிராமம் | .. அல்லிக்குட்டை | நாள் | .. 17.02.2021 |
| வட்டம் | .. சங்ககிரி | | |

வா.சா.1 – சம்பத்குமார் - குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி.

இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக வா.சா.ஆ.2 அறிவிப்பை அனுப்பினீர்களா என்றால், ஆமாம். அந்த அறிவிப்பிற்கு யார் எனது வழக்கறிஞரிடம் தகவல் சொன்னார்கள் என்றால், நான்தான் சொன்னேன். அதில் சொல்லப்பட்டிருக்கும் விபரங்கள் அனைத்தும் சரியானவைகளா என்றால், ஆமாம், சரியானவைகள்தான். வழக்கு சொத்து விபரத்தில் மொத்தம் எத்தனை வீடுகள் காட்டப்பட்டுள்ளது என்றால், 2 வீடுகள் காட்டப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் இரண்டு வீடுகள் இருக்கும் விபரத்தை சொல்லியிருக்கிறீர்களா என்றால், வில்லை வீடு இருப்பதாக சொல்லியிருக்கிறேன் என்று சாட்சி அந்த ஆவணத்தை வாங்கிப்பார்த்துவிட்டு சொன்னார். எத்தனை வீடுகள் என்று குறிப்பாக சொல்லவில்லை என்பதால், வில்லை வீடு என்ற வார்த்தை ஒரு வீட்டை மட்டுமே குறிக்கும் என்று சொன்னால், சரியல்ல, எத்தனை வீடுகள் என்று மட்டும்தான் நான் குறிப்பிடவில்லை. தாவா சொத்து விபரத்தில் தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு மின் இணைப்பு இருப்பதாக குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்று சொன்னால், சரியல்ல, எனது தகப்பனார் பெயரில் மின்சார இணைப்பு இருப்பதாக சொல்லியுள்ளேன். சொத்து விபரத்தில் எனது தகப்பனார் பெயரில் மின்சார இணைப்புஇருப்பதாக சொல்லியிருக்கிறார்களா என்றால், சொல்லியிருக்கிறேன். அதேபோல், சொத்து விபரத்தில் கதவு எண் பற்றிய விபரத்தை சொல்லியிருக்கிறீர்களா என்றால், இல்லை. சாட்சியிடம் வழக்குரையின் சொத்து விபரத்தை காண்பித்து நான் குறிப்பிடுவதுபோல் எனது தகப்பனார் பெயரில் மின்சார இணைப்பு இருப்பதாக சொல்லவில்லை, ஆனால் சொல்லியிருப்பதாக தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சாட்சி வழக்குரையின் சொத்து விபரத்தை வாங்கிப்பார்த்துவிட்டு, அது ஆங்கிலத்தில் இருப்பதாகவும், அதனால் தனக்கு அந்த

விபரம் தெரியாது என்றும் கூறினார். நான் என்ன படித்துள்ளேன் என்றால், 5 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் எழுதப்படிக்க தெரியாது என்றால், சரிதான். பிராதும் ஆங்கிலத்தில்தான் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். எனவே, பிராதில் என்ன இருக்கிறது என்ற விபரம் எனக்குத் தெரியாது என்று சொன்னால், சரியல்ல, எனது வழக்கறிஞர் படித்து என்னிடம் அதில் வழக்குரைக்குரிய விபரத்தை சொன்னார். அதேபோல் சொத்து விபரம் ஆங்கிலத்தில் தட்டச்சு செய்யப்பட்ட போதிலும் அதையும் எனது வழக்கறிஞர் என்னிடம் படித்துக்காட்டி, தமிழில் விளக்கம் கூறியதற்கு பிறகு ஒப்புக்கொண்டுதான் கையெழுத்துப்போட்டேன் என்றால், சரிதான். ஆகவே, தற்போது சொத்து விபரம் ஆங்கிலத்தில் இருப்பதால் எனக்கு தெரியாது என்று கூறுவது தவறானது என்று சொன்னால், சரிதான். வா.சா.ஆ.1 ஒரே ஒரு பட்டா மட்டும்தான் உள்ளதா என்றால், இல்லை, எங்களுக்கு ஒன்றும் பிரதிவாதிகள் வகையறாவிற்கு ஒன்றும் உள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் 1 ஆம் பிரதிவாதி பெயரில் கொடுக்கப்பட்டுள்ள பட்டாவா என்றால், ஆமாம், அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.1. தாவா சொத்தில் வீடுகள் உள்ளது என்பதற்கும், அதில் மின்சார இணைப்பு உள்ளது என்பதை நிரூபிப்பதற்கும் வீட்டுவரி ரசீதையோ, மின்சார வரி ரசீதையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன், அவர் தாக்கல் செய்துள்ளாரா இல்லையா என்று எனக்குத் தெரியாது. நானும் எனது வழக்கறிஞர் மேற்கண்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளாரா இல்லையா என்று கேட்டு தெரிந்து கொள்ளவில்லையா என்றால், தேவைப்பட்டால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து கொள்ளலாம் என்று எனது வழக்கறிஞர் என்னிடம் சொன்னார். எத்தனை வீட்டுவரி ரசீதுகளை எனது வழக்கறிஞரிடம் கொடுத்தீர்கள் என்றால், வீட்டுவரி ரசீது கொடுக்கவில்லை, ஒரேயொரு மின்கட்டண ரசீதையும் மின்சார கட்டண அட்டையையும் எனது வழக்கறிஞரிடம் கொடுத்தேன். ஆக வீட்டுவரி ரசீது, என்னிடம் இல்லவே இல்லை, அதை நான் எனது வழக்கறிஞரிடம் கொடுக்கவும் இல்லை என்று சொன்னால், வீடு பாழடைந்துவிட்டதால், வீட்டுவரி செலுத்துவதில்லை. வா.சா.ஆ.2 அறிவிப்பை யார் யார் சார்பாக கொடுத்தீர்கள் என்றால், நான், எனது சகோதரிகள் ஸ்ரீமதி, பொன்னி மற்றும் சரஸ்வதி ஆகியோர் சேர்ந்து கொடுத்தோம், அதன்பிறகு அவர்கள் வழக்கிற்கு வரவில்லை. வா.சா.ஆ.2 அறிவிப்பை கொடுக்கும்பொழுது எனது தாயார் உயிருடன் இருந்தார்களா என்றால், படுத்த

படுக்கையாக உயிருடன் இருந்தார்கள். எனது தாயார் சார்பாகவும், வா.சா.ஆ.2 ஆவணம் கொடுக்கப்பட்டதா என்றால், ஆமாம், எனது தாயார், சகோதரிகள் மற்றும் என் சார்பாக கொடுக்கப்பட்டது. வா.சா.ஆ.2 ஆவணத்தை யார் யாருக்கு கொடுத்தீர்கள் என்றால், பவுனாம்பாள், பவுனாம்பாள் மகன் மற்றும் மகள்களான தட்சிணாமூர்த்தி, பேபி (எ) பூம்பாவை, மணிமேகலை, காலஞ்சென்ற செல்வம் மனைவி வளர்மதி ஆகியோருக்கும், சின்னம்மாள் என்பவருக்கும் அனுப்பினோம். எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும், சாட்சியிடம் வா.சா.ஆ.2 ஆவணத்தைக் காண்பித்து, இந்த அறிவிப்பை சிதம்பரம் மகன் சம்பத்குமார் ஆகிய நான் மட்டும் கொடுத்ததாகத்தான் உள்ளது என்று கேட்கப்பட்டது, சாட்சி ஆம் என்று கூறினார். நான் கூறுவது போல் வா.சா.ஆ.2 அறிவிப்பில் எனது தாயார் மற்றும் சகோதரிகள் சார்பாக அறிவிப்பு அனுப்பப்பட்டதாக கண்டு எழுதப்படவில்லை என்றால், சரிதான். மேற்கண்ட அறிவிப்பு நான் கூறுவது போல் பவுனாம்பாள், அவரது வாரிசுதாரர்கள் மற்றும் ஒரு சின்னம்மாளுக்கு அனுப்பப்பட்டதாக இல்லை, பவுனாம்பாளுக்கு மட்டும்தான் அனுப்பப்பட்டதாக உள்ளது என்றால், சரிதான். இந்த அறிவிப்பில் நானும், 1 ஆம் பிரதிவாதி பவுனாம்பாளும் கூட்டு சுவாதீன அனுபவத்தில் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதேபோல் என்னையும், பவுனாம்பாளையும் தவிர மற்றவர்கள் கூட்டு சுவாதீன அனுபவத்தில் இருக்கிறார்களா, அவர்களுக்கு பங்கு உள்ளதா இல்லையா என்ற விபரம் சொல்லப்படவில்லை என்றால், சரிதான்.

வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம் / சம்பத்குமார்

ஒப்பம் / திருமதி. மு.பாக்கியம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.